[2009 ஜூலை 14

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பாலாற்றின் குறுக்கே குப்பம் பகுதி, கணேசபுரத்தில் ஆந்திர அரசு அணை கட்டுவதற்கு முன்பாக கால்வாய் அமைக்கும் பணி தொடங்கியுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் அணை கட்டுவதற்கு முன்பாகக் கால்வாய் அமைக்கும் பணியைத் தொடங்கியுள்ளது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக 7 உறுப்பினர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. சி. ஞானசேகரனும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி.க. ராஜா அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக திரு. து. ரவிக்குமார் அவர்களும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதை இப்போது நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மற்றவற்றையெல்லாம் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நாளை பார்ப்போம்.

ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் அணை கட்டுவதற்கு முன்பாகக் கால்வாயினை அமைக்கும் பணியைத் தொடங்கியுள்ளது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அ.இ.அ.தி.மு.க. சார்பாக திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. சி. சண்முகவேலு, திரு. கு. பாண்டுரங்கன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. சி.வி. சண்முகம் ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்களும், திரு. தி.க. ராஜா அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பாக திரு. து. ரவிக்குமார் அவர்களும் விதி 55 மற்றும் 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்பு கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். சுருக்கமாக இரண்டு நிமிடங்களில் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்

2009 ஜூலை 14]

முற்பகல் 10–35

*திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டுக்கு முன்னால் ஆந்திர மாநிலம், குப்பத்திற்கு அருகே கணேசபுரம் என்ற ஊருக்கு அருகில், பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டப்படுகின்ற தகவல் வந்து அதற்குரிய அரசினுடைய ஆணை அங்கே வெளியிடப்பட்டிருக்கிறது என்றும், அந்தத் தடுப்பணையினுடைய திட்ட மதிப்பீடு ரூ.250 கோடி என்றும், நாம் இங்கே சட்டமன்றத்தில் எடுத்துக் கூறி, அந்தத் தடுப்பணை அங்கே கட்டப்பட்டால், தமிழகத்தில் இருக்கின்ற வேலூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை உள்பட 5, 6 மாவட்டங்களுக்குப் பெரும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் என்றும், விவசாயம் பாதிக்கப்படும் என்றும், மக்கள் பெரும் அவதிக்குள்ளாவார்கள் என்றும் இந்தச் சட்டமன்றத்தில் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற வகையில் இங்கே பிரச்சினை கொண்டு வரப்பட்டது. அப்போது அரசின் சார்பாக, அவ்வாறு அணை கட்டுவதற்கு எந்தவிதத்திலும் தமிழக அரசு இடம் கொடுக்காது; அதைத் தடுத்து நிறுத்துவோம் என்று இங்கே உறுதியும் சொல்லப்பட்டது.

ஆனால், இவையெல்லாவற்றையும் மீறி, இன்றைக்கு வருகின்ற செய்திகள் பெரும் அச்சத்தையும், அந்தப் பகுதியில் இருக்கின்ற 5 மாவட்ட மக்களையும் பெரும் கவலைக்கும் உள்ளாக்கியிருப்பது உண்மையிலேயே அதிர்ச்சியும், கவலையும் அளிக்கக்கூடியதாக இருக்கின்றது. புகைப்படத்துடன்கூடிய ஆதாரத்துடன் அந்தப் பகுதியில், முதல் கட்டப் பணியாக ரூ.50 கோடிக்கு–50 கிலோ மீட்டர் அளவுக்குக் கால்வாய்ப் பணி முடிவடையும் நிலையில் இருக்கிறது. கால்வாய் அமைக்கின்ற பணி முடிவடைந்தவுடன், ரூ.200 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும் என்று பொதுப் பணித் துறை சார்பாக ஆந்திர அரசு தெரிவித்திருக்கின்றது. இவை அனைத்தையும் தமிழகத்தில் இருக்கின்ற பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கும், அரசுக்கும் தெரிவித்திருக்கிறோம் என்று ஆந்திராவில் இருக்கிற பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்ததாகச் செய்திகள் வந்திருக்கின்றன. தொடர்ந்து தமிழகத்தில், பன்மாநில நதிப் பிரச்சினையில் இந்த அரசு மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது என்பதற்கு தற்போது பாலாறு மிகச் சிறந்த உதாரணமாக இருந்து, இன்றைக்குத் தமிழக மக்களை மிகுந்த கவலையில் ஆழ்த்தியிருக்கின்றது. நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தப் பணி நிறைவேறுகின்றபட்சத்தில், தமிழகத்திலே இருக்கிற

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2009 ஜூலை 14

வேலூர் மாவட்டம்—ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் பருவ மழை நல்ல முறையில் பெய்தாலும், மிகக் கடுமையான வறட்சி அங்கே ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை கடந்த 100 ஆண்டுகளாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மீண்டும் ஆந்திர மாநிலத்தில், பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும் என்றால், வேலூர் மாவட்டம்–திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை மாவட்டம் உள்பட அனைத்துப் பகுதிகளுக்கும் பெரும் குடிநீர்ப் பிரச்சினை வரும்; விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்; இயற்கைச் சூழ்நிலை கெடும். இவ்வாறு இருக்கக்கூடிய சூழ்நிலையில், இந்த அரசு—அந்த 5 மாவட்ட மக்களுக்கு–பாலாற்றில் ஆந்திர அரசு தடுப்பணை கட்டுகின்ற திட்டத்தைத் தடுப்பதற்கு மத்திய அரசின்மூலமாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? இன்னொன்றும் சொல்கின்றார்கள். சுற்றுச்சூழல் துறையினுடைய அனுமதியைப் பெறவில்லை என்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் மீறி அங்கே ஆந்திர அரசு தடுப்பணையைக் கட்டிக்கொண்டிருக்கிறது. இவ்வளவு பெரிய துணிச்சல் அந்த அரசுக்கு எப்படி வந்தது? இதனைத் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழக அரசு என்ன மாற்று வழியைக் கையில் வைத்திருக்கின்றது? தமிழக மக்களுக்கு அவர்கள் அளிக்கப் போகின்ற பதில் என்ன என்பதனைக் கேட்டு, அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10–40

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாறு ஒன்றுதான் எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு ஜீவ நதியாக, ஜீவ நாடியாக இருக்கக்கூடிய ஆறு. அந்தப் பாலாறு கடந்த 5 ஆண்டு காலத்தில் மழை நீரைப் பார்க்காத காரணத்தினாலே, இப்போது எங்களுடைய வேலூர் பகுதியிலே தொரப்பாடி, அதேபோல அல்லாபுரம் பேரூராட்சிகளிலே 30 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வழங்கக்கூடிய ஒரு அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி மாவட்டம் முழுமையிலும் எங்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினை மட்டுமல்ல; விவசாயத்திற்கும் தண்ணீர் இல்லாத சூழல் இருக்கிறது. காரணம், நிலத்தடி நீர் எங்கேயோ போய்விட்டது. இப்படி இருக்கிறபோது, நம்முடைய Inter State Agreement–லே ஆந்திராவுக்கும், தமிழகத்திற்கும் இடையே ஓடுகிற ஆறு, அந்தப்

2009 ஜூலை 14] [திரு. சி. ஞானசேகரன்]

பாலாறு—ஏற்கெனவே போடப்பட்ட Inter State Agreement–லே மைசூர் மகாராஜா காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியோடு போடப்பட்ட Agreement–லே அவர்கள் நடுவிலே எந்த அணையையும் கட்டக்கூடாது என்று, ஏற்கெனவே அதற்கான ஷரத்து இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, ஆந்திர அரசு 30 தடுப்பணைகளை ஏற்கெனவே கட்டி முடித்துவிட்டார்கள். இது 31–வது தடுப்பணை. காரணம், அந்தப் பாலாறு ஆந்திர எல்லையிலே ஓடுவதே 30 கிலோ மீட்டரில்தான். அந்த 30 கிலோ மீட்டருக்குள் ஏற்கெனவே 30 தடுப்பணைகளைக் கட்டிவிட்டவர்கள், இப்போது 31–வது பெரிய அணையாக 250 கோடி ரூபாயில் இன்றைக்கு அவர்கள் ஒரு பெரிய திட்டத்தைத் தீட்டி, அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, இன்றைக்கு பெரிய அளவிலே 2 மலைகளுக்கு இடையிலே குப்பம் பகுதியிலே, கணேசபுரம் என்கிற இடத்தில் இந்த அணையைக் கட்டினால் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வேலூர் மாவட்டத்தை எட்டிப் பார்க்காத ஒரு அவல நிலை நிச்சயமாக எதிர்காலத்தில் ஏற்படும். இதை நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை வலியுறுத்தினோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதும் இதை நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலே பல முறை வலியுறுத்தினோம். அப்பொழுது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அவர்கள் வழக்குத் தொடுப்பதாகச் சொல்லி வழக்கு போட்டார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகும் இதே பிரச்சினை எழுந்தபோது, மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம்.

உச்ச நீதிமன்றத்திலே இப்போது அந்த வழக்கு என்ன நிலையில் இருக்கிறது? காரணம், இப்போது மாண்புமிகு திரு. ஜெய்ராம் ரமேஷ் என்கிற நம்முடைய மத்திய வனத் துறை அமைச்சர் அவர்கள், நாங்கள் இதற்கு 15 நாட்களில் அனுமதியை, forest clearance–ஐக் கொடுத்துவிடுவோம் என்று, சுற்றுச்சூழலுக்கான அனுமதியைக் கொடுத்துவிடுவோம் என்று ஒரு பேட்டியிலே சொன்னதாக, சில பத்திரிகைகளில் செய்தி வந்தது. இதுகுறித்து இதே அவையில் மீண்டும் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது, இங்கே எங்கள் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாமா திரு. சுதர்சனம் அவர்கள்கூட ஏற்கெனவே அந்த அமைச்சரோடு பேசியபோது, நான் அதுமாதிரி பேட்டி கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய முன்னாள் பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களும், இங்கே சட்டமன்றத்திலே இதுபற்றிப் பிரச்சினை

[திரு. சி. ஞானசேகரன்] [2009 ஜூலை 14

எழுப்பியபோது, அவர்கள் அப்படி பேட்டியே கொடுக்கவில்லை என்று தொலைபேசியில் தன்னிடம் கூறியதாகச் சொன்னார்கள். ஆனால், ஏற்கெனவே பத்திரிகைகளிலே பேட்டி என்று வந்து, பிறகு அதற்கு மறுப்புத் தெரிவித்த மத்திய அமைச்சருடைய பேட்டி எந்தப் பத்திரிகையிலும் இதுவரை வரவில்லை. அமைச்சரோடு தொலைபேசியிலே மட்டும் இது நின்று கொண்டிருக்கிறது. நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், சுப்ரீம் கோர்ட்டில் இருக்கக்கூடிய அந்த வழக்கினுடைய நிலை, என்ன stage? அதாவது, what is the stage of the case என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்; ஒன்று.

இரண்டாவது, அங்கு இருக்கக்கூடிய ஆந்திர நீர்ப்பாசனத் துறை அமைச்சர், "நாங்கள் ஏற்கெனவே, DPR—Detailed Project Report–ஐ தமிழக அரசுக்கு அனுப்பிவிட்டோம் என்று சொல்கிறார்; அனுப்பிவிட்டோம் என்று சொல்கிறவர்கள் இந்தக் கால்வாயை, 50 கோடியிலே இப்போது தோண்டுகிறார்கள். கால்வாய் என்பது New Channel. அதுவும் 60 கிலோ மீட்டருக்கு குப்பம் பகுதியில் கணேசபுரத்திலிருந்து சித்தூர் வரையிலும், இவர்கள் இந்தக் கால்வாயைத் தோண்டிவிட்டார்கள் என்று சொன்னால், நிச்சயமாக எதிர்காலத்தில் பாலாற்றில் வரக்கூடிய தண்ணீர் முழுமையாக அங்கே தடுக்கப்பட்டு, நம்முடைய வேலூர் மாவட்டத்திற்கும், வேலூர் மாவட்டத்தைத் தாண்டி வருகிறபோது, திருவள்ளூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் சென்னைக்கு வரக்கூடிய தண்ணீர் வராமலே போய்விடும். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போது Forest Clearance–ஐப் பெறாமல், போர்க்கால அடிப்படையில் 50 கோடி ரூபாயை ஒதுக்கி, இப்போது கால்வாயை வெட்டிக்கொண்டிருக்கிற ஆந்திர அரசினுடைய அந்தப் போக்கைக் கண்டித்தும்—அதேபோல 50 K.V. Sub Station–ஐ உருவாக்கிவிட்டிருக்கிறார்கள். இப்படி எல்லாப் பூர்வாங்க வேலைகளையும் அவர்கள் முழுமை செய்துவிட்டால், பிறகு அவர்கள் அணையைத் திருட்டுத்தனமாகக் கட்டி முடித்துவிடக்கூடிய ஒரு சூழல் வந்துவிடும். ஆகவே, உச்ச நீதிமன்றத்தை நாம் அணுகி, உடனடியாக இப்படி விதிகளை மீறி ஆந்திர அரசு கட்டிக் கொண்டிருக்கிற நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துச் சொல்லி, அங்கே தடையாணை பெறுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா? இது நம்பர் 2.

2009 ஜூலை 14] [திரு. சி. ஞானசேகரன்]

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர்—துணை முதல்வர்—அவர்களையும், அதேபோல உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் ஏற்கெனவே அனுப்பி, ஆந்திர முதல்வரோடு பேச வைத்தார்கள். அப்போது அவர்கள், அதெல்லாம் நாங்கள் கட்டவில்லை என்று அவர்களிடம் உறுதி அளித்ததாகச் சொன்னார்கள். ஆனால் அந்த உறுதிமொழி இப்போது மீறப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேச்சுவார்த்தையின் மூலமாகவாவது ஆந்திர முதலமைச்சரோடு பேசி, இதைத் தடுத்து நிறுத்தி, எங்களுடைய வேலூர் மாவட்டத்து மக்களுடைய வயிற்றில் பால் வார்ப்பார்களா, தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 10–45*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், மிக முக்கியமாக வேலூர் மாவட்டம் ஆகிய இந்த மாவட்டங்களுடைய உயிர் நாடி ஆறாக இருந்து வருவது பாலாறு. பாலாற்றில் ஏற்கெனவே கர்நாடகத்திலே ஒரு பெரிய அணையைக் கட்டி, பெரும் பகுதித் தண்ணீரை அவர்கள் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு ஆந்திர எல்லையில் 12 கிலோ மீட்டர் தொலைவுக்குத்தான் வருகிறது. ஆனால், அதற்குள்ளேயே 22 தடுப்பணைகள் அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. அதையும் மீறி கொஞ்சம் தண்ணீர் வந்துகொண்டிருந்ததையும் இப்போது தடுக்கும் முயற்சியாக குப்பம் அருகே கணேசபுரத்திலே அணை கட்டத் திட்டமிடப்பட்டதாக முதன்முதலில் இந்த அவையிலே நான்தான் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்தேன். கொண்டு வந்த நேரத்தில், அப்படி எந்தத் திட்டமும் இல்லை, ஆந்திர அரசில் தொடர்புகொண்டு பேசினோம் என்ற செய்தியும் சொல்லப்பட்டது. அதை ஒட்டித்தான் நானும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் அந்த இடத்திற்கு அனுமதி பெறாமலேயே, அனுமதி கிடைக்காது என்ற அடிப்படையில், உண்மைதானா என்று கண்டறிவதற்காக அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று பார்த்தோம். பார்த்த நேரத்தில், அங்கே திட்டமிடப்பட்டு பாலாற்றின் குறுக்கே மரம், செடியெல்லாம் வெட்டப்பட்டு, அங்கே கல்லில் துளை போடப்பட்ட காட்சிகளை

எல்லாம் பார்த்துவிட்டு, முதல் கட்டப் பணிகள் நடந்துகொண்டிருப்பதையும் கண்டு, மீண்டும் இங்கே வந்து, இந்தச் சட்டப் பேரவையில் நாங்கள் எடுத்துச் சொன்னோம். நாங்கள் கட்டவிடாமல் தடுத்துக்கொள்கிறோம் என்று மீண்டும் சொன்னதன் அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு நம்முடைய துணை முதல்வர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எல்லோரும் சென்று பார்த்து, அந்தத் திட்டம் கட்டாயம் வராது, எப்பாடுபட்டாவது தடுத்து நிறுத்துவோம் என்ற வாக்குறுதியை நீங்கள் அளித்தீர்கள். உச்ச நீதிமன்றத்திலேயும் வழக்குத் தொடர்ந்திருக்கிறீர்கள்.

ஆனால், இன்றைய நிலையைப் பொறுத்தவரையிலே, நாங்கள் அணை கட்டமாட்டோம் என்று ஆந்திர அரசு சொல்கிறது. நடுவண் அரசின் வனத் துறை, நாங்கள் அனுமதி தரமாட்டோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே அணை கட்டும் பணிக்கு 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒப்பந்தம் போடப்பட்டு—அதையெல்லாம் அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு—50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாய்க்கால் வெட்டும் பணி அங்கே குப்பத்திலிருந்து சித்தூர் வரையிலும் முடியும் நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றது. அதைக்கூட படமாக எங்களுக்கெல்லாம் அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆகவே, வாய்க்கால் வெட்டப்படுகிறது. அங்கே மின் உற்பத்திக்காக ஒரு 50 கே.வி. மின் உற்பத்தித் திட்டமும் முடிய இருக்கிறது.

இப்படியெல்லாம் ஒரு பக்கம் செய்துகொண்டு—அங்கே சொல்லப்படுகிற செய்தி என்னவென்று சொன்னால், அங்கேயிருக்கிற குப்பம் நகராட்சிப் பகுதிக்குக் குடிநீருக்காக 6 டி.எம்.சி. தண்ணீர் எடுப்பதற்காக நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம் என்று ஒரு பக்கம் சொல்லப்படுகிறது. ஆகவே ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தமிழ்நாட்டை ஏமாற்றிவிட்டு அந்த அணையைக் கட்டி, தண்ணீர் எடுத்துச் செல்லக்கூடிய நிலை வந்தால், எதிர்காலத்தில் இந்த மாவட்டங்களுக்கு—இப்போதே பாலாறு பாழாய்ப் போய்விட்டது—ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வராமல் போய்விடும் என்ற காரணத்தினால்தான், இங்கே தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நம்முடைய அரசு போர்க்கால அடிப்படையில் அந்தப் பணியை முறியடிக்க வேண்டும்.

2009 ஜூலை 14] [திரு. ஜி.கே. மணி]

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆழ்ந்த அனுபவத்தின் காரணமாக, நேரடியாகத் தொடர்புகொண்டு பேசி சுமுகமாகத் தீர்ப்பது அல்லது நடுவண் அரசு தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பது என்ற வகையிலே, எப்பாடுபட்டாவது பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு கட்டக்கூடிய அணையைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போல, இன்னொரு ஆறு கிளை ஆறாக ஆந்திராவிலிருந்து திருவலம் வழியாக ஓடி வருகிறது. திருவலத்திலே அங்கேயும் ஒரு தடுப்பணை கட்டப்படுவதாகக் கடந்த 6, 7 மாதங்களாகச் சொல்லப்பட்டு வருகிறது; பணியும் நடந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு) பொன்னையாறு. திருவலத்திலே பொன்னையாற்றில் அந்தப் பணியும் நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் நாம் வளர விட்டுவிடக்கூடாது. ஏற்கெனவே நதிநீர்ப் பிரச்சினைகளிலே சிக்கித் தவிக்கிற நாம், கையேந்தி நிற்கிற நாம், மீண்டும் அந்த நிலைக்குத் தள்ளப்படக்கூடாது. அதற்கு அரசு உரிய முயற்சியை போர்க்கால அடிப்படையிலே மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கொண்டு வந்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

முற்பகல் 10–50

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றில் ஆந்திர மாநிலம் அணை கட்டுவது பற்றி எழுப்பியுள்ள பிரச்சினை குறித்து இந்த அவையிலே அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கோ.க. மணி அவர்களும் ஆழமான கருத்துகளை எடுத்துச் சொல்லி, நம்முடைய மாநில மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு, இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், வேலூர், காஞ்சிபுரம், சென்னை போன்ற மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், இவர்களுக்குப் பாசன நீரும், குடிநீரும் கிடைக்கமுடியாத ஒரு

சூழ்நிலை ஏற்படும் என்பதை எடுத்துக்காட்டி தங்களுடைய உரையை நிகழ்த்தியிருக்கின்றார்கள். பாலாறு பல மாநிலங்களுக்கு இடையே ஓடுகின்ற நதியாகும். 1892 ஆம் ஆண்டு பன்மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்த் தொகுப்பு இணைப்பில், அட்டவணை–A-வில் பாலாறு நதி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின்படி, அட்டவணை–A-வில் குறிப்பிட்டுள்ள நதிகளின் கீழ் இருக்கும் மாநிலத்தில் (Downstream State) பயன்பாட்டிற்குத் தேவையான நீரை எக்காரணம் கொண்டும் மேலே அமைந்துள்ள மாநிலங்கள் தடுக்கவோ, திருப்பிவிடவோ, தேக்கவோ கூடாது. அந்த ஒப்பந்த ஷரத்து இரண்டின்படி, Clause-II, மேலே உள்ள மாநிலம் நீர்த்தேக்கம் அமைக்கவேண்டுமாயின், கீழ் மாநிலத்தின் ஒப்புதல் பெற்றுத்தான் அமைக்க வேண்டும். எனவே, ஆந்திர மாநிலம் நீர்த்தேக்கம் கட்டுவது தொடர்பாகத் தமிழ்நாட்டினை அணுகி, அதன் முன்அனுமதி பெறவேண்டும். இவ்வாறு நீர்த்தேக்கம் அமைப்பது குறித்து தமிழ்நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே கணேசபுரம் என்ற இடத்தில் அணை ஒன்றைக் கட்டப் போவதாகச் செய்திகள் வந்ததையடுத்து, மத்திய அரசுடனும், ஆந்திர அரசுடனும் தொடர்புகொண்டபோது, அவர்களிடமிருந்து பதில் ஏதும் வராததால், தமிழ்நாடு அரசு 10–2–2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் இப்பிரச்சினை தொடர்பாக சிவில் வழக்கினைத் தாக்கல் செய்தது. அந்த வழக்கு இன்னமும் உச்ச நீதிமன்ற விசாரணையிலே உள்ளது.

இதற்கிடையில், மத்திய அரசின் நீர்வள ஆதாரத் துறை மற்றும் சுற்றுச்சூழல், வனத் துறை அமைச்சகங்களுக்கு மே 2007–ல் அனுப்பப்பட்ட கடிதங்களில், அதிக அளவில் வன நிலங்கள் தேவைப்படுவதாகத் தெரிய வருகிறது என்றும், இதன்பொருட்டு, ஆந்திர அரசு மத்திய அமைச்சகத்தின் இசைவினைப் பெறவில்லை என்று தெரிய வருகிறது என்றும், இத்தகைய சூழ்நிலையில் ஆந்திர அரசு அணை கட்டுவதை நிறுத்துவதற்கு, தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் 7–1–2008 அன்று விசாரணைக்கு வந்தபோது, உச்ச நீதிமன்றம், இரண்டு மாநிலங்களுக்கு இடையேயான இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு முயற்சித்து முடிவெடுக்கலாம் என்று உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், மத்திய நீர் வளக் குழுமத்தின் தலைவர், அதிகாரிகள் மட்டத்தில் 11–3–2008 அன்று கூட்டத்தைக் கூட்டினார். அந்தக் கூட்டத்தில்,

2009 ஜூலை 14] [கலைஞர் மு. கருணாநிதி]

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை ஆந்திர மாநிலம் இத்திட்டத்தைத் தொடரலாகாது என்று ஆந்திர அரசைக் கேட்டுக்கொண்டார். இரு மாநில அரசுகளும், தொழில்நுட்பம் சார்ந்த விவரங்களை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில், பல்வேறு இடங்களில் இருக்கக்கூடிய நீர் இருப்பு பற்றி ஒரு கூட்டு ஆய்வினை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது.

இப்பிரச்சினையில் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், தனது இசைவை அளிப்பதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்ததையடுத்து, இவ்வமைச்சகத்தின் அமைச்சர் அவர்களை *21–6–2009* அன்று தொடர்புகொண்டபோது, அவர் "*15* நாட்களில் மத்திய அரசின் இசைவை அளிப்பதாகப் பத்திரிகைகளுக்குச் செய்திகள் எதுவும் நான் அளிக்கவில்லை" என்றும், அனுமதி அளிப்பது குறித்து ஒரு பேச்சு வரவே இல்லையென்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

*முற்பகல் 10-55*

புது டெல்லியில் *24–6–2009* அன்று நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாடு மற்றும் ஆந்திர அரசுகள் நீரியல் புள்ளிவிவரங்கள் போன்றவற்றை அளிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் இதுவரையில் அனுமதி அளிக்காத நிலையிலும், தற்போது வழக்கு உச்ச நீதிமன்றத்திலே நிலுவையிலுள்ள நிலையிலும் மற்றும் மத்திய நீர் வளக் குழு ஏற்படுத்திய குழு இன்னமும் எந்தவிதமான இறுதி முடிவையும் எடுக்காத நிலையிலும், ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே எந்த அணையையும் தற்போது கட்ட இயலாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கையை ஆந்திர அரசு தொடருமேயானால், இந்த அரசு சட்டரீதியாக அதை எதிர்கொள்ளும் என்பதை நான் இங்கே அவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உச்ச நீதிமன்றத்தில், பாலாற்றில் அணை கட்டுவது பற்றிய பிரச்சினை குறித்து ஒரு முடிவை எடுக்க மத்திய நீர் வள ஆணையத்தை, ஒரு குழு அமைத்து, இரண்டு மாநில அரசு அதிகாரிகளையும் அந்தக் குழுவிலே அழைத்து, அவர்களின் பரிந்துரைகளைப் பெறுமாறு உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே

கூறியுள்ளது. இரண்டு மாநில அரசு அதிகாரிகளையும் கொண்ட குழு நியமிக்கப்பட்டு, அந்தக் குழுவின் ஆய்வுக் கூட்டமும் நடந்துள்ளது. இன்னும் அந்தக் குழு தன்னுடைய பரிந்துரையைத் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலே உள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இத்தகைய தடைகள் அந்த அணை அங்கே எழுப்புவது குறித்து இருக்கிறது என்பது தெரிந்திருந்தாலும்கூட, பத்திரிகைகளிலே பெரிய அளவிற்குப் புகைப்படங்களோடு, ஆதாரபூர்வமான, நம்பக்கூடிய அளவிற்குச் செய்திகள் வரும்போது, உள்ளபடியே அதிர்ச்சியும், ஆச்சரியமும் நமக்கு ஏற்படத்தான் செய்கிறது. குழு அமைத்து, அந்தக் குழுவினுடைய முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டு, இன்னொருபுறத்திலே அணைக்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்று செய்திகள் வருவது, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு ஏமாற்று வேலையாக இருக்கின்றது. ஆனால், அத்தகைய ஏமாற்று வேலையில் ஆந்திர அரசு ஈடுபடும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அப்படி ஈடுபட்டிருக்குமேயானால், மாநிலங்களிடையே நல்லுறவு ஏற்படுவதற்கும், இருக்கிற நல்லுறவு உறுதிப்படுவதற்கும் எந்தவொரு மாநில அரசும் ஒத்துழைப்புத் தர வேண்டுமேயல்லாமல், ஒத்துழைப்புத் தராவிட்டால், இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டிலேயே இந்த மாநில அரசுக்கு நம்பிக்கை இல்லையென்றுதான் பொருளாகும். எனவே, மத்திய அரசு இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு, தக்க முடிவு காண வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அவையின் சார்பாக, இங்கே இந்தத் தீர்மானங்களை அளித்த நம்முடைய உறுப்பினர்களுடைய எண்ணத்திற்கேற்ப கேட்டுக்கொள்கின்றேன்.

மத்திய அரசு இதிலே வாளாயிருக்காமல், வாளாய் இருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்ற கோரிக்கையை, நீங்கள் எல்லாம் வழங்கிய இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையின் அடிப்படையிலே கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)